குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி. எண். 77/ 2021

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதி செவ்வாய்கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எம். உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு கூடுதல் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : பாலசுப்ரமணி வயது : 48
த/பெ : சித்துராஜ் தொழில் : Welding Work (கிரில் வேலை)
ஊர் : சமயம் : இந்து
வட்டம் : காடையாம்பட்டி ஜாதி : விஸ்வகர்மா
மாவட்டம் : சேலம்
ம.சா : 1 தேதி : 12.04.2022

முதல் விசாரணை:

நான் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம் மற்றும் அஞ்சல், டேனிஷ்பேட்டை மெயின்ரோட்டில் வசித்துவரும் கே.எஸ்.சித்துராஜ் மகன் பாலசுப்ரமணி ஆகிய நான் பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் நான் மேற்படி வழக்கில் சி.எம்.பி எண்.51/2022 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் கூடுதல் பிராமணபத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையென்று உறுதி கூறுகிறேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அவற்றை குறியீடு செய்து மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| வ. எண் | தேதி | விவரம் | தன்மை | ஆவணக் குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | 24.12.2021 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காடையாம்பட்டி கிளையில் புகார்தாரரின் வங்கி கணக்கின் 01.01.2017 ம் தேதி முதல் 24.12.2021 ம் தேதி வரையிலான வங்கி அறிக்கை | அசல் | ம.சா.ஆ.5 |
| 2. | 23.12.2021 | இந்தியன் வங்கி, தீவட்டிப்பட்டி கிளையில் புகார்தாரின் வங்கி கணக்கின் 01.01.2020 ம் தேதி முதல் 23.12.2021 ம் தேதி வரையிலான வங்கி அறிக்கை | அசல் | ம.சா.ஆ.6 |
| 3. | 23.12.2021 | பாரத ஸ்டேட் வங்கி, தீவட்டிப்பட்டி கிளையில் புகார்தாரரின் வங்கி கணக்கின் 01.01.2017 ம் தேதி முதல் 23.12.2021 ம் தேதி வரையிலான வங்கி அறிக்கை | அசல் | ம.சா.ஆ.7 |
| 4. | 10.11.2019 | கிரய ஒப்பந்த பத்திரம் | புகைப்பட நகல் | ம.சா.ஆ.8 |
| 5. | 06.02.2003 | புகார்தாரர் பெயரிலுள்ள தானசெட்டில் மென்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | 06.11.2020 | புகார்தாரர் கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்த ஆவணம் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.10 |
| 7. | 27.11.2020 | புகார்தாரர் டாஸ்மாக் லிமிடேட்க்கு அவரது கட்டிடத்தை வாடகைக்க விட்டதற்கான நடவடிக்கைகளின் ஆவணம் | புகைப்பட நகல் | ம.சா.ஆ.11 |

(எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்கண்ட 8 மற்றும் 11 ஆம் ஆவணங்களை ஒளிநகல் என்று ஆட்சேபித்தார். மேற்படி ஆட்சேபனையுடன் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.)

**எதிரி தரப்பில் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.